www.Padasalai.Net www.CBSEtips.in

KANCHIPURAM DT

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: 12407-

நேரம்: 1.30 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** 8×1=8

1. சிதம்பர ஸ்மரண - இந்நூலின் ஆசிரியர் ............
   அ) சிவாஜி கணேசன் ஆ) பாலச்சந்திரன் சுள்ளிக்காடு
   இ) பாலச்சந்திரன் ஈ) ராஜீவ் நாத்
2. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்
3. *வேறுபட்டதைக் குறிப்பிடுக:*
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
4. ஆராய்ந்து சொல்கிறவர்
   அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்
5. பொருத்தித் தேர்க :
   அ) குறுநாவல் - 1. கைவிட்ட தேசம்
   ஆ) நாவல் - 2. நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது
   இ) சிறுகதை - 3. கானல்வரி
   ஈ) கவிதைகள் - 4. இரவுகளில் பொழியும் துயரப்பனி
   அ) 3 2 1 4 ஆ) 3 1 2 4 இ) 2 3 1 4 ஈ) 2 1 4 3
6. சாபவிமோசனம், 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
   அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்
7. 'காய்நெல்' - என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை
8. 'விட்ட குறை' என்னும் சிறுகதையின் படைப்பாளர்
   அ) ஜெயமோகன் ஆ) புதுமைப்பித்தன் இ) அழகிரிசாமி ஈ) அப்துல் ரகுமான்

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி:** 4×2=8

9. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
10. "எங்கிருந்தோ வருகிறது
    வண்ணத்துப்பூச்சியொன்று" - இப்பாடல் வரி இடம் பெற்ற நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
11. காப்பியம் எத்தனை வகைப்படும்? காப்பியத்தைக் குறிக்கும் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.
12. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
13. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?
14. சேய்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. எவையேனும் நான்கனுக்கு விடையளி: 4×3=12**

15. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.
16. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.
17. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
18. தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
19. குலஷோவ் விளைவு - குறிப்பு வரைக.
20. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6**

21. *தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:*
    அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
    ஆ) முருந்கன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
22. *ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக :*
    அ) அறுத்து ஆ) நகை
23. *ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக:*
    அ) தலைக்கோல் ஆ) பெருந்தேர்
24. *பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக:*
    இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்
25. *பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க:* களம் - கலம்

**V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக): 2×5=10**

26. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

27. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? - விளக்குக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6**

28. அ) 'காய் நெல்' எனத் தொடங்கும் புறநானூறு பாடல்
    ஆ) 'தலை' என் முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

★★★ / ★★★

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com